தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 124/பேரூ/2021

நாள் 27.12.2021

திரு. R. ராஜ்பரத்,
காளியப்பன்நல்லூர்,
மயிலாடுதுறை மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தரங்கம்பாடி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், காளியப்பன்நல்லூர் மற்றும் அஞ்சல், 80/2 மெயின் ரோடு N.N.சாவடி என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. ராஜ்பரத் என்பவரின் 16.11.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 22.11.2021ல் பெறப்பட்டு, 124/2021என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், காளியப்பன்நல்லூர் மற்றும் அஞ்சல், 80/2 மெயின் ரோடு, N.N.சாவடி என்ற முகவரியில் வசிக்கும் திரு. R. ராஜ்பரத் என்பவர் தமது 16.11.2021 நாளிட்ட மனுவில் தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அனுமதி இல்லாமல் செயல்படும் ஐஸ் தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு பேரூராட்சி செயல் அலுவலருக்கு 16.6.2020 அன்று புகார் மனு அளித்ததாகவும், நேரில் இரண்டுமுறை சென்றும் நடவடிக்கை எடுக்காததால், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூருக்கு 26.6.2020ல் புகார் மனு அளித்தும், அன்றைய தினத்திலேயே முதலமைச்சரின் தனிப்பிரிவு மற்றும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கும் புகார் மனு அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது மனு மீது நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் ஒ.மு.5883/2020 நாள் 21.8.2020ல் கேட்டுக்கொண்டபின்னரும், உயர் அலுவலர்களின் கடிதத்தினை உதாசீனப்படுத்திவிட்டு, உள் நோக்கத்திற்காக தன் மனு மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, தனது மனு மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை விவரம் கேட்டு, உதவி இயக்குநர், தஞ்சாவூர் மற்றும் செயல் அலுவலர், தரங்கம்பாடி

பேரூராட்சி ஆகியோருக்கு **6.10.2020**ல் மனு அனுப்பியதற்கும் எந்தவிதமான பதிலும் இல்லை, நடவடிக்கையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இதைத் தொடர்ந்து, **30.7.2020**ல் முதலமைச்சரின் தனிப்பிரிவில் நேரில் மனு செய்தும் நடவடிக்கை எடுக்கக்கூடிய அலுவலர்களான செயல் அலுவலர், உதவி இயக்குநர் ஆகியோர் நடவடிக்கை எடுப்பதாக தெரியவில்லை. இவர்கள் அரசின் சட்ட விதிகளைப் புறந்தள்ளி, லாப நோக்கத்திற்காக, அனுமதி இல்லாத, சட்டவிரோத ஐஸ் தொழிற்சாலைகளுக்குச் சாதகமாக செயல்படும் உறுதியான நிலையைக் கொண்டிருக்கின்றனர். இந்நிலையில், **26.3.2021** அன்று Antony Ice Plantல் பணியாற்றிய புருஷோத்தமன் என்ற இளைஞர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார். அப்போதுகூட பேரூராட்சி செயல் அலுவலர் நடவடிக்கை எடுக்கவில்லை. அந்த அளவிற்கு அனுமதியில்லாத ஐஸ் தொழிற்சாலைகள் மீது தரங்கம்பாடி பேரூராட்சி நிர்வாக அலுவலர்கள் மற்றும் செயல் அலுவலர் விஸ்வாசம் வைத்துள்ளனர். தனது மனு மீது உரிய காலத்தில் நடவடிக்கை எடுத்து Ice Plants மூடப்பட்டிருந்தால், இந்த உயிரிழப்பு ஏற்பட்டிருக்காது. எனவே, தனது புகார் மனு மீது நடவடிக்கை மேற்கொண்டு, உதவி இயக்குநர், தஞ்சாவூர் மற்றும் தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை விசாரணை செய்து, அரசு அலுவலர்கள் தங்களது கடமையைச் செய்யத் தவறியமைக்கு தக்க தண்டனை வழங்கிடவும், அனுமதி இல்லாமல் இயங்கிவரும் ஐஸ் தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவும் உரிய ஆணையினை பிறப்பிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ளார்.

2. தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் **22.12.2021** அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் **16.12.2021** நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவுஅஞ்சல் மூலம் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் மற்றும் தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் **22.12.2021** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

மனுதாரர் திரு. R. ராஜ்பரத் **22.12.2021** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 4 ஐஸ் பிளான்ட்டுகள் கடந்த நான்கு வருடங்களாக இயங்கி வருகின்றன. இவை அங்குள்ள மீனவர்களால் மீன்களை பதப்படுத்துவதற்காக நடத்தி வருகின்றனர். அனுமதியில்லாமல் இயங்கிவரும் மேற்கண்ட ஐஸ் பிளான்ட்டுகள் அனுமதியில்லாமல் இயங்கிவருவது குறித்து பேரூராட்சி நிர்வாகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகியவற்றில் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேற்கண்ட அனுமதியில்லாமல் இயங்கிவரும் ஐஸ் பிளான்ட்டுகளுக்காக, இராட்சச மோட்டார் பம்புகள் மூலம் சட்டவிரோதமாக நிலத்தடி நீரை உறிஞ்சி எடுப்பதால், எங்கள் குடியிருப்பு பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தும், குடிநீர் மாசுபட்டும் வருகின்றன. எனவே, அனுமதியில்லாமல் இயங்கிவரும் ஐஸ் பிளான்ட்டுகள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்திடவும், மேற்கண்ட ஐஸ் பிளான்ட்டுகள் அனுமதியில்லாமல் இயங்கிவருவதை தடுக்கத் தவறிய பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்திடவும் இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் 22.12.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தனது வாக்குமூலத்தில் "தரங்கம்பாடி பேரூராட்சியில் மீனவர்களால் நடத்திவரப்படும் நான்கு (4) ஐஸ் பிளான்ட்டுகள் அனுமதி இல்லாமல் கட்டப்பட்டதால், கட்டுமான வேலையை நிறுத்திட பின்வரும் மூன்று (3) ஐஸ் பிளான்ட்டுகளுக்கு Notice வழங்கப்பட்டுள்ளன என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்:–

1. ஆண்டனி ஐஸ் பிளான்ட் – நோட்டீஸ் அனுப்பிய நாள் 7.8.2020
2. பார்வதி ஐஸ் பிளான்ட் – நோட்டீஸ் அனுப்பிய நாள் 12.10.2020
3.கே.எஸ். மித்ரா ஐஸ் பிளான்ட் – நோட்டீஸ் அனுப்பிய நாள் 12.10.2020

நான்காவதாக காமதேனு ஐஸ் பிளான்ட் நிறுவனத்தின் உரிமையாளர் திரு. வீரக்குமார் என்பவருக்கும் கட்டுமானப் பணியை நிறுத்திட பேரூராட்சியால் நோட்டீஸ் 12.10.2020–ல் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், மேற்கண்ட நான்கு (4) ஐஸ் பிளான்ட்டுகளுக்கு நோட்டீஸ் அனுப்பிய பின்னர் பேரூராட்சியால் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட Notice-ன் நகல்களை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். மேலும், இந்நேர்வு தொடர்பாக எனது 22.12.2021 நாளிட்ட கடிதத்தில் காணும் விவரங்களையே எனது மேல்விளக்கமாக இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 22.12.2021 நாளிட்ட அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சிக்கு திரு. இரா. இராஜ்பரத், வழக்கறிஞர் என்பவரால் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–இன் கீழ் 27.5.2020 அன்று பேரூராட்சி பகுதியில் இயங்கிவரும் ஐஸ் பிளான்ட் குறித்து கோரப்பட்ட தகவலுக்கு தரங்கம்பாடி பேரூராட்சி மூலம் தகவல் அறியும் உரிமைச் சட்டம் எண்.08/2020/அ1 நாள் 30.05.2020ல் மனுதாரருக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டது. தகவல் வழங்கப்பட்ட ஆவண நகலினை தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ளார். திரு. இரா. இராஜ்பரத், வழக்கறிஞர் என்பவரால் தரங்கம்பாடி பேரூராட்சிக்கு பதிவஞ்சல் வாயிலாக பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி இயங்கிவரும் ஐஸ்பிளான்ட்டுகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கக்கோரி 16.6.2020ல் கடிதம் அனுப்பப்பட்டது. மற்றும் தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களின் ஓ.மு.எண்.1516/2020/பேரூ.3 நாள் 13.7.2020ல் மனுதாரர் திரு. இரா. ராஜ்பரத் என்பவரின் மனுமீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. தொடர் நடவடிக்கையாக பேரூராட்சி மூலம் அனுமதியின்றி செயல்பட்டுவரும் தொழில் நிறுவனங்கள் அனைத்திற்கும் உரிய துறைகளின் அனுமதி பெற்று செயல்படவும், அனுமதி பெறப்படாத நிலையில் தொழிற்சாலை செயல்பாட்டினை நிறுத்திடவும், அறிவிப்பு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. மேலும், நகர் ஊரமைப்புத் துறை கடித எண்.554/2020 நா.மா.2 நாள் 26.12.2020–ன்படியும் அனுமதி பெறாமல் இயங்கிவரும் ஆண்டனி ஐஸ் பிளான்ட் நிறுவன உரிமையாளருக்கு சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நிறுவனத்தில் உள்ள பொருட்கள் அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு ஏலம் விடப்படும் என அறிவுறுத்தப்பட்டது.

மேற்படி அறிவிப்பினைத் தொடர்ந்து, தரங்கம்பாடி பேரூராட்சி ந.க.எண்.355/2020/அ1 நாள் 20.01.2021ன்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் கடிதத்தினை சுட்டிக்காட்டி மீளவும் ஆண்டனி ஐஸ் பிளான்ட் நிறுவனத்திற்கு அறிவிப்பு நோட்டீஸ் அனுப்பப்பட்டதாகவும், அதன் நகலினையும் தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ளார்.

5. தரங்கம்பாடி பேரூராட்சி மற்றும் நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர் அவர்களது அறிவிப்பு நோட்டீஸ் ஆகியவற்றைத் தொடர்ந்து ஆண்டனி ஐஸ் பிளான்ட் உரிமையாளர் மேற்படி ஐஸ் பிளான்ட்டிற்கான உரிய அனுமதி பெற, தொடர்புடைய துறைகளிடமிருந்து பெறப்பட்ட தடையின்மைச் சான்றுகள் இணைக்கப்பட்டு, உரிய அனுமதி பெற கருத்துருக்களுடன் நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநருக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள ஆவணங்களை பேரூராட்சிக்கு நேரடியாக கொடுத்து அனுமதி கோரிய நிலையில், நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெற்ற பின்னரே பேரூராட்சி மூலம் கட்டடம் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்படும் என்றும், அதுவரை தொழில் நடத்தப்படுவதனை நிறுத்திடவும் உரிமையாளருக்கு வாய்மொழி வாயிலாகவும், அறிவிப்பு நோட்டீஸ் வாயிலாகவும் தெரிவிக்கப்பட்டது. தொழில் நிறுவனம் என்பதால் உரிய வழிமுறைகளை பின்பற்றி அனுமதி வழங்கவேண்டிய நிலையில் உள்ள காரணத்தினால் உரிய துறைகளிடமிருந்து அனுமதி பெற்ற பின்னரே பேரூராட்சியின் மூலம் அனுமதி வழங்க வழிவகை உள்ளதால், நாளது தேதிவரை மேற்படி ஆண்டனி ஐஸ்பிளான்ட்டிற்கு பேரூராட்சி வாயிலாக எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை. மனுதாரரால் தெரிவிக்கப்பட்டவாறு மேற்படி தொழில் உரிமையாளருக்கும், பேரூராட்சிக்கும் எவ்வித உள்நோக்கமும் இல்லை என்றும் தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளதோடு, பேரூராட்சி பகுதியில் உரிய துறைகளின் அனுமதி பெற்ற பின்னரே அனைத்து தொழில் நிறுவனங்களும் செயல்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

6. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் மற்றும் தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் வாக்குமூலம், அவரது 22.12.2021 நாளிட்ட அறிக்கை மற்றும் நோட்டீஸ் நகல்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்டவை கண்டறியப்பட்டன:–

❖ மனுதாரரின் புகார் மனு மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்களின்படி தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் நாகப்பட்டினம்–சென்னை தேசிய நெடுஞ்சாலையில் கிழக்குப் பக்கம் (1) Antony Ice Plant (2) K.S. Mithra Ice Plant என்ற இரண்டு நிறுவனங்கள் நான்கு ஆண்டுகளாக அனுமதியில்லாமல் செயல்பட்டு வருகிறதென்றும், தரங்கம்பாடி–மாணிக்கப்பங்கு சாலையில் (3) Kamadhenu Ice Plant கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாகவும் மற்றும் (4) Parvathi Ice Plant கடந்த ஐந்து ஆண்டுகளாகவும் அனுமதியில்லாமல் செயல்பட்டுவருவதாக குறிப்பிட்டுள்ளதும், இவ்வளவு பெரிய பிரமாண்டமான தொழிற்சாலைகள் பேரூராட்சியில் கண்ணில் படாதது அதிர்ச்சியளிப்பதாகவும்

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது அறியப்படுகிறது. எனவே, பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அனுமதியில்லாமல் இயங்கிவரும் ஐஸ் பிளான்ட்டுகள் இயங்கிவருவது புலனாகிறது/ஊர்ஜிதமாகிறது.

- மேலும், மனுதாரர் தனது புகார் மனு குறித்து அனுப்பியுள்ள ஆதார ஆவணங்களுடன், இணைத்தனுப்பியுள்ள புகைப்பட நகலினை பார்க்கும்போது மேற்கண்ட ஐஸ் பிளான்ட்கள் அனைத்தும் பெரிய கட்டிட வளாகத்தில் இயங்கிவருகின்றன என்பதும் புலனாகிறது

- உரிய அனுமதியின்றி இவ்வளவு காலமாக இயங்கிவரும் ஐஸ் பிளான்ட்கள் மீது இதுவரை தரங்கம்பாடி பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளாதது வியப்பூட்டுகிறது

- மனுதாரர் 16.6.2020ல் தரங்கம்பாடி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அளித்துள்ள புகார் மனுவில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவுபடி அனுமதி பெறாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் அகற்றப்படவேண்டுமென சுட்டிக்காட்டி உள்ளார். மேலும், பேரூராட்சி பகுதியில் இயங்கும் நான்கு ஐஸ் பிளான்ட்டுகள் மீதும் உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாறும், சட்ட விரோதமாக செயல்படும் கட்டிடங்களுக்கு மின்சார இணைப்பினைத் துண்டிக்க மின்துறைக்கு பரிந்துரைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்.

- பேரூராட்சி நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ளாத நிலையில், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் அவர்களுக்கு மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள 22.6.2020 நாளிட்ட புகார் மனுவில் அனுமதியில்லாமல் இயங்கிவரும் ஐஸ் பிளான்ட்டுகளுக்காக காழியப்பநல்லூர் ஊராட்சி மற்றும் ஏனைய பகுதிகளில் சட்டவிரோதமாக ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து நிலத்தடிநீர் எடுக்கப்பட்டு வருவதையும், குடிநீருக்காக மக்கள் நடத்திய போராட்டங்களையும், நஞ்சை நிலத்தில் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதால் தவறான முன்னுதாரணமாகிறது என்றும், மேலும் பேரூராட்சி, தமிழக அரசு மற்றும் மத்திய அரசுகளுக்கான வரி இழப்பீடு ஏற்பட்டிருக்காது என்றும், சுற்றுச் சூழல் மாசு ஏற்பட்டிருக்காது என்ற அனைத்து விவரங்களையும் குறிப்பிட்டு, அனுமதியில்லாமல் இயங்கும் ஐஸ் பிளான்ட்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் நகல் பேரூராட்சிகளின் இயக்குநரகத்திற்கும் அனுப்பப்பட்டதன் அடிப்படையில், உரிய நடவடிக்கை எடுக்கும்பொருட்டு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூருக்கு 21.8.2020 நாளிட்ட கடிதம் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் தொடர் போராட்டங்களுக்கு எந்தவிதமான நடவடிக்கையும் பேரூராட்சியால் மேற்கொள்ளப்படவில்லை என்பது ஆதாரங்களின் அடிப்படையில் கண்கூடாகிறது.

❖ தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சியால் அனுமதி பெறாமல் கட்டப்படும் கட்டடம்/கட்டி முடிக்கப்பட்ட கட்டடங்களுக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, உட்பிரிவு 199/209, 317(ஏ)ன்கீழ் கட்டிடப்பணிகளை நிறுத்தக்கோரி ஆண்டனி ஐஸ்பிளான்ட், மித்ரா ஐஸ் பிளான்ட், பார்வதி ஐஸ் பிளான்ட் ஆகிய ஐஸ் பிளான்ட் உரிமையாளர்களுக்கு அறிவிப்பு மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. சட்டப்படியான மேல் நடவடிக்கை ஏதும் தொடரப்படவில்லை என்பது ஆவணங்களின்படி அறியமுடிகிறது. உரிய அனுமதி பெறும்வரை நடவடிக்கைகளை நிறுத்திவைக்குமாறு வாய்மொழியாக அறிவுறுத்தப்பட்டதாக செயல் அலுவலர் தெரிவித்துள்ளது ஏற்கக்கூடியதல்ல.

❖ நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்து உரிய அனுமதி பெறாத நிறுவனங்கள் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் பல ஆண்டுகளாக இயங்கிவரும் நிலையில், இதுவரை உரிய அனுமதியை அனைத்து ஐஸ் நிறுவனங்களும் பெற்றுள்ளனவா என்பதை செயல் அலுவலர்கள் கண்காணிக்கத் தவறியுள்ளது வெட்டவெளிச்சமாவதுடன், இதனால் பேரூராட்சிக்கு நிதியிழப்பும் ஏற்பட்டுள்ளது.

7. மேற்குறிப்பிடப்பட்டுள்ள சூழ்நிலையில், தரங்கம்பாடி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் உரிய அனுமதி பெறாமல் இயங்கிவரும் (1) ஆண்டனி ஐஸ் பிளான்ட் (2) K.S. மித்ரா ஐஸ் பிளான்ட் (3) காமதேனு ஐஸ் பிளான்ட் மற்றும் (4) பார்வதி ஐஸ் பிளான்ட் ஆகிய நிறுவனங்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் வெறும் கண்துடைப்பிற்காக அந்நிறுவனங்களுக்கு அறிவிப்புகளை மட்டுமே கடந்த 2020ல் அளித்துவிட்டு, நகர் ஊரமைப்புத் துறையின் அனுமதி பெற்ற பின்னரே, பேரூராட்சி நிர்வாகத்தினால் அனுமதி வழங்க முடியுமென பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது ஏற்கத்தக்கதல்ல. இது பேரூராட்சி நிர்வாகத்தின் மெத்தனப் போக்கையே எடுத்துக்காட்டுகிறது. பேரூராட்சி நிர்வாகத்தின் வரித்தண்டலர் முறையாக அனுமதி பெறாமல் இயங்கும் தொழிற்சாலைகளின் விவரங்களை கள ஆய்வில் கண்டறிந்து செயல் அலுவலரின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தால், இவ்வளவு வருடங்களாக இயங்கிவரும் ஐஸ் பிளான்ட்டுகளை தடைசெய்திருக்கலாம். அல்லது முறையான அனுமதியை பெற அந்நிறுவனங்களை அறிவுறுத்தி உரிய அனுமதியினையும் பெற்றிருக்கலாம். இதனால் பேரூராட்சிக்கும் வரி வருவாய் மேம்பட்டிருக்கும். மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியரால் நகர் ஊரமைப்புத்துறை மற்றும் பொதுப்பணித்துறையின் நிபந்தனைகளை தவறாமல் பின்பற்றவேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, 27.4.2021ல் நஞ்சை நிலத்தில் 0.21.24 ஹெக்டேர் நிலப்பரப்பில் ஐஸ் பிளான்ட் கட்டிக்கொள்ள தடையின்மைச் சான்று திரு. P. தமிழ்மணி, தரங்கம்பாடி என்பவருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனவே, இதனைத் தவிர உரிய அனுமதி பெற்றுள்ளதற்கான ஆதாரங்கள் எதனையும் தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் அளிக்கவில்லை.

எனவே, உரிய அனுமதி இல்லாமல் தரங்கம்பாடி பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் ஐஸ் பிளான்ட்டுகளை கண்காணிக்காமல், கடமையில் மெத்தனமாக செயல்பட்டுள்ளதற்கு பொறுப்பான செயல் அலுவலர்கள் மற்றும் சம்மந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், நகர் ஊரமைப்புத் துறையிடமிருந்தும் இதர சம்மந்தப்பட்ட துறைகளிடமிருந்தும் உரிய அனுமதியினை பெறாமல் தரங்கம்பாடி பேரூராட்சி பகுதியில் இயங்கிவரும் ஐஸ் பிளான்ட்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கையினை மேற்கொள்ள தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது. இது குறித்து பேரூராட்சியின் அதிகாரங்களைப் பயன்படுத்தி துரிதமாக தடுப்பு நடவடிக்கை எடுக்க ஆணையிடப்படுகிறது. பேரூராட்சிகளின் ஆணையாளர் இதனை உயர்மட்ட அலுவலர்கள் உறுதிசெய்ய உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. R. ராஜ்பரத்,
80/2 மெயின் ரோடு, N.N. சாவடி, காளியப்பன்நல்லூர் (அஞ்சல்), தரங்கம்பாடி வட்டம்,
மயிலாடுதுறை மாவட்டம்–609 307

மாவட்ட ஆட்சித் தலைவர், மயிலாடுதுறை மாவட்டம், மயிலாடுதுறை

பேரூராட்சிகளின் ஆணையாளர், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

செயல் அலுவலர்,
தரங்கம்பாடி தேர்வுநிலை பேரூராட்சி, தரங்கம்பாடி, மயிலாடுதுறை மாவட்டம்
நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032

செயலாளர்